**நில ஆர்ஜித வழக்குகள் சிறப்பு சார்பு நீதிமன்றம் அரக்கோணம்**

அ.வ.எண் . 121 /2019

Deposition of Witness : PW. 1 Jayanthi

இந்நீதிமன்ற நிலை 2 உதவியாளர் திரு. கண்ணன் அவர்களால் சத்திய பிரமாணம் செயவிக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி 1ன் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் நாளில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

எனது 20/06/1973 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை எனது தந்தைக்கும் எனது பெரியப்பாவிற்கும் இடையே ஏற்பட்டது என்றால் சரிதான். வாசாஆ 5 ல் உள்ள கையெழுத்து எனது தந்தையின் கையெழுத்துதான். அவர் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளார். வாசாஆ 5ல் உள்ள சொத்தை வழக்கு சொத்தில் குறிப்பிடவில்லை. வாசாஆ 7 ல் ஆர்கே தச்சணா மூர்த்தி என்று உள்ளது என்றால் தசரதன் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. தசரதனின் மருத்துவசிகிச்சை பற்றிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 9 ல் ஆர்கே தச்சணா மூர்த்தி என்று உள்ளது என்றால் தசரதன் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. வாசாஆ 10 ல் குறிப்பிட்ட பெயர் எதுவும் இல்லை என்றால் சரிதான். 07/09/2011 தேதியிட்ட உயிலில் எனது தந்தையின் பெயர் தசரதன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது தந்தை பெயர் தசரதன்தான். குடும்ப அட்டையில் அவர் பெயர் தச்சணாமூர்த்தி என்று உள்ளதால் ஆதார் அட்டையிலும் அதே பெயர் உள்ளது. தசரதன் மற்றும் தச்சணாமூர்த்தி வெவ்வேறு நபர்கள் என்றால் சரியல்ல. இரண்டும் ஒரே நபர்தான். எனது சகோதரியின் தந்தை பெயர் ஆர் கே தசரதன். வாசாஆ 5ல் ஆர் கே தசரதன் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளார் என்றும் வாசாஆ 11 ல் தமிழில் கையெழுத்து உள்ளதால் வாசாஆ 11 ஆள்மாறாட்டம் செய்து பதிவு செய்யப்பட்டுள்ளது எனற்ால் சரியல்ல. அதன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. வாசாஆ12ல் ஆதார் அட்டையில் தச்சணாமூர்த்தி என்று உள்ளது ஆனால் கையெழுத்து ஆர்கே தசரதன் என்று உள்ளது என்றால் இரண்டும் ஒரே நபர்தான் எனது தந்தைதான். வாசாஆ 11 ன் அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வேறு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாசாஆ 11 இந்த வழக்கில் குறியீடு செய்யபட்டது தவறு என்றால் சரியல்ல. எனது வீடு முனிசாமி பிள்ளைத் தெருவில் உள்ளது. பிரதிவாதி வீடு

அதே தெருவில் கடைசியில் உள்ளது. அரசாத்தம்மன் கோவிலுக்கும் பிதிவாதி வீட்டுக்கும் கொஞ்ச தூரம் தான் உள்ளது. 40 அடி தூரம்தான் இருக்கும் என்றால் சரியல்ல. பிரதிவாதி வீட்டுக்கு பக்கத்தில் படவேட்டம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். முனிசாமி தெருவில் சிறு வயது முதலே வசித்து வருகிறேன். பிரதிவாதி வீடு எனது வீட்டில் இருந்து 15 வீடு தள்ளி இருக்கும். பிரதிவாதி, அவரது தந்தை சுமார் 60 வருடங்களாக அதே தெருவில்தான் வசித்து வருகிறார்கள் நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ 13 எனது தந்தையின் இறப்பு சான்றுதான். அது பொய் ஆவணம் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**